தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

கார்த்திகை 4, தாரண - திருவள்ளுவர் ஆண்டு 2035

2004 நவம்பர் 19, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி."

ஆழ்ந்த அறிவும், விடாமுயற்சியும் கொண்டு ஒருவர் அயராது பாடுபட்டால் அவரைச் சேர்ந்துள்ள குடிமக்களின் பெருமை உயரும்.

1. அறிவிப்பு

(அ) தேசிய ஒருமைப்பாடு தின உறுதிமொழி—பேரவை சிறிது நேரம் ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தேசிய ஒருமைப்பாடு தினத்தையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலை 11-00 மணிக்கு தலைமைச் செயலகப் பிரதான கட்டடத்திற்கு அருகில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் உறுதிமொழி செய்து வைக்க உள்ளார்கள். அந்நிகழ்ச்சியில் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் பேரவை காலை 10-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்று மீண்டும் 11-15 மணிக்குக் கூடும்.

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 41, திரு. எஸ். மாணிக்கராஜ், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்

41—

சாலை விரிவாக்கம்

***24500—திரு. எஸ். மாணிக்கராஜ்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாகர்கோவில்-திருச்செந்தூர் சாலையை விரிவுபடுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை விரிவுபடுத்தும் திட்டம் தற்சமயம் இல்லை.

திரு. எஸ். மாணிக்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதியில், நாகர்கோவில் முதல் திருச்செந்தூர் வரை உள்ள சாலையை விரிவுபடுத்தினால், திருச்செந்தூரில் உள்ள சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் அது மிகவும் பயனுள்ளதாக அமையும். மேலும் இது ஒரு சுற்றுலாத் தலமாக இருப்பதால் சுற்றுலாப் பயணிகளுக்கும் போக்குவரத்திற்கு வசதியாக இருக்கும். எனவே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இதனை மறுபரிசீலனை செய்து இந்தச் சாலை விரிவுபடுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் வினாவில் குறிப்பிட்ட சாலையானது நாகர்கோவில்-திருச்செந்தூர் சாலை ஆகும். இதன் மொத்த நீளம் 64.8 கி.மீ. ஆகும். இதில் 34.5 கி.மீ. நீளமுள்ள சாலை தூத்துக்குடி கோட்டத்திலும், 30.3 கி.மீ. சாலை திருநெல்வேலி கோட்டத்திலும் பராமரிக்கப்படுகிறது. நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சாலையின் பெயர் ஆழ்வார்திருநகரி-சாத்தான்குளம்-இட்டாமொழி—

வள்ளியூர் சாலை ஆகும். இது கி.மீ. 29/9 முதல் 38/4 வரையுள்ளது. இந்த 8.5 கி.மீ. நீளம் உள்ள மாநிலச் சாலை தற்போது நல்ல நிலையில் உள்ளது. உறுப்பினர் கோரிய ஒருவழிச் சாலையான 8.5 கி.மீ. நீளத்தை, இருவழித் தடச் சாலையாக அகலப்படுத்தி பாலம் கட்ட ரூ.260 இலட்சம் தேவைப்படும். மேலும் நாகர்கோவில்-திருச்செந்தூர் சாலையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் வருகின்ற சாலையும், எதிர்வரும் காலத்தில் அரசின் நிதிநிலைமைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் இருவழித்தடச் சாலையாக மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். மாணிக்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதி ஆண்டிலாவது இப்பணி நிறைவேற்றித் தரப்படுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் பணி முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் சாலை என்று சொல்கிறபோது, ஆரல்வாய்மொழி சாலையைக் குறிப்பிடுகின்றார்களா அல்லது நாகர்கோவில் முடிய உள்ள சாலையைக் குறிப்பிடுகின்றார்களா? ஏனென்றால் இதுசம்பந்தமான விவரங்கள் வருகின்றபோது, அந்த மாவட்டத்தினுடைய கடைசிப் பகுதியான களியக்காவிளை வரை என்று மாற்றிக்கொண்டால் - அது மொத்தத்தில் வருகின்ற அந்தச் சாலையினுடைய விரிவாக்கமாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த வளர்ச்சிப் பணிகளாக இருந்தாலும் சரி-வசதியாக இருக்குமென்ற அந்த அடிப்படையிலே அந்த மாவட்டத்தினுடைய கடைசிப் பகுதியான களியக்காவிளை வரை இதை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய களியக்காவிளை வரை இந்தச் சாலையை நீட்டித் தருவதற்கு எதிர்வரும் காலங்களில் முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 42, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

42—

வீடியோ கான்பரன்சிங் வசதி

***28762—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைமைச் செயலகத்திலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் வீடியோ கான்பரன்சிங் மூலம் பேச ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தலைமைச் செயலகத்திலிருந்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஒருங்கிணைந்த சேவைகள் இலக்க முறை வலையமைப்பு (ISDN) தொலைபேசி இணைப்பு வழியாக வீடியோ கான்பரன்சிங் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்நிய முதலீடு மட்டுமின்றி நாட்டின் பாதுகாப்பு, நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி ஆகிய அத்தனை துறைகளிலும் மேன்மை பெற்று இருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில், தகவல் மற்றும் தொழில்நுட்பவியல் துறையின் அடித்தளம் மிகவும் பலம் வாய்ந்த நிலையில் அமைக்கப்பட்டுள்ளது கண்டு மகிழ்ச்சி அடையும் இந்த வேளையில், TIDEL Park, TICEL Park போன்ற தொழில்நுட்பப் பூங்காக்களை அமைத்து மகிழ்கின்ற இந்த ஆட்சியில், சென்னையில் உள்ளதைப் போல தகவல் மற்றும் தொழில்நுட்பவியல் முன்னறிவுக்கூறுகள் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களுக்கு விரிவுபடுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோன்று Video Conferencing வசதி செய்யப்பட்டிருப்பதற்கு இந்த